# புதிய மயக்கங்கள்



## இந்திரா சௌந்தர்ராஜன்

www.pustaka.co.in

http://www.pustaka.co.in

# புதிய மயக்கங்கள்

# Pudhiya Mayakkangal

Author:

இந்திரா சௌந்தர்ராஜன்

Indira Soundarrajan

For more books
http://www.pustaka.co.in/home/author/indira-soundarajan

Digital/Electronic Copyright © by Pustaka Digital Media Pvt. Ltd.

All other copyright © by Author.

All rights reserved. This book or any portion thereof may not be reproduced or used in any manner whatsoever without the express written permission of the publisher except for the use of brief quotations in a book review.

கல்யாண வீடுகலகலப்பாக இருந்தது! வீதியையே அடைத்துப் போட்ட பந்தல். அதில் சரம்சரமாய் சீரியல் வரிசை. ஒவ்வொரு பந்தலிலும் ஈச்சம் பாளை தென்னங்குலை என்கிற காசுத் திமிர். ஆயிரத்தை கடந்து எரியும் குழல் விளக்குகள் வேறு....

அமைச்சர் அண்ணாமலையார் வீட்டுத் திருமணம் என்றால் சும்மாவா? அவரது பொதுப்பணித்துறையே கல்யாண காரியங்களில் மூழ்கி இருந்தது. டிபார்ட்மென்ட் ஜீப் நான்காவது தடவையாகவோ ஐந்தாவது தடவையாகவோ மளிகை சரக்கை இறக்கிக் கொண்டிருக்கிறது.

சீப் எஞ்ஜினியர் ரிசப்ஷன் நாற்காலிகளை எண்ணிப்போட்டுக் கொண்டிருக்கிறார். உதவி எஞ்ஜினியர்கள் தோரணம் கட்டி முடித்துவிட்டு மேடை அலங்காரத்தில் மூழ்கி இருக்கிறார்கள்.

நம்பிக்கைக்குரிய பி.ஏ. வெங்கடாசலம், பத்திரிகையாளர்களை கல்யாண பந்தல் பக்கமே வரவிடாதபடி பார்த்துக் கொண்டு பாட்டிலில் பல நிருபர்களை நீந்த விட்டுக் கொண்டிருக்கிறார்.

அப்படியும் ஒரு ரிப்போட்டர் பந்தல் பக்கமாய் சென்று பொதுப்பணித்துறையே அமைச்சரின் மகள் கல்யாண காரியங்களில் மூழ்கி இருப்பதை புகைப்படம் எடுக்காமல் இல்லை.

அமைச்சரின் காதுக்கும் விஷயம் போகிறது. சிரித்துக் கொள்கிறார் அண்ணாமலையார்.

அமைச்சரின் சிரிப்புக்கு பல அர்த்தங்கள் உண்டு. அதை கண்டுபிடிப்பதில் மாரியப்பன்தான் கில்லாடி. யார் இந்த மாரியப்பன்? அமைச்சரின் வலதுகை, இடதுகை, வலது கால், இடது கால் என்று எப்படி வேண்டுமானாலும் சொல்லிக் கொள்ளலாம்.

பள்ளிப்பருவத்திலேயே சினேகமாம்.

அது சரி… இப்பொழுது இந்த சிரிப்புக்கு என்ன அர்த்தம்? புரியாமல் நிற்பவனை பார்த்து,…

அண்ணாமலையார்.

“ஏ, லேய்… போய் வேலையப்பாரு. அவன் எழுதிட்டு போகட்டும். அதனால வங்காளவிரிகுடா பொங்கிடப் போறதில்லை. அரபிக்கடலும், காஞ்சிடப் போறதில்லை. ஜனங்கள பத்தி எனக்கு தெரியும். நீ போய் டிபன் ரெடியாயிடிச்சான்னு பாரு.”

அவன் அதிர்ச்சியோடு நடக்கிறான். அண்ணாமலையாருக்கு நல்ல தேக்கு உடம்பு. உயர்ந்த சரீரம்சாரீரம் சதா வெற்றிலைபோட்டு நொதிக்கும் வாய். பெரிய நெற்றியில் வகிடு எடுக்கும் ஸ்ரீ சூரணக்கோடு வேறு பார்க்க பக்திமான் போல இருப்பார். ஆனால் பக்திமான் என்று சொல்லமுடியாது எல்லா சேட்டைகளும் உண்டு. எந்த சூழ்நிலையிலும் கலங்கிப் போய் விடமாட்டார். மற்றவர்களை கலக்கித்தான் பழக்கம்.

பதிமூணு வருஷமாக மந்திரியாக இருக்கிறார். எப்படி மந்திரியாவது? என்று புத்தகம் எழுதும் சகல அனுபவ தகுதிகளும் உண்டு.

எலெக்ஷன் தில்லு முல்லுகளிலும் பி.எச்.டி பட்டம் வாங்கியவர். முதல்வராக வேண்டும் என்கிற ஆசை துளி உண்டு. அதற்கான இமேஜ் பில்ட் அப்பில் இப்போது இருக்கிறார். அதன் முதல் கட்டம்தான் மகள் கல்யாணம். ஒரே மகள் தான். அக்ஷரா என்கிற மாடர்னான பெயரை 1975லேயே வைத்துவிட்ட தீர்க்க தரிசி. அது மட்டுமா?

மகளை ஆக்ஸ்போர்ட்டு, ஒயிட்ஃபீல்ட் என்று கண்டம் விட்டு கண்டம் அனுப்பி படிக்க வைத்தவர். அதே போல ஒரு வெளிநாட்டு கோடீஸ்வர மாப்பிள்ளைக்கே இப்பொழுது அவளை முடிவும் செய்திருக்கிறார்.

மாப்பிள்ளை சீட்டாடிக் கொண்டிருக்கிறான்.

கல்யாணம்னா முதல்நாள் இரவு சீட்டாட வேண்டும் எனும் இலக்கணம் பொய்யாகாதபடி…தண்ணியும் போட்டாக வேண்டும்போட்டுவிட்டு தத்துபித்து என்று உளற வேண்டும்இதெல்லாம் சினேகிதங்களின் வேலை.

செய்து கொண்டிருக்கிறார்கள்.

எல்லோரிடமும் கல்யாண இலக்கணங்கள் இருக்கின்றன.

ஆனால்….கல்யாணப் பெண் மட்டும் விதிவிலக்காக வெளிறிப் போய் கிடக்கிறாள்.

பிரேதம் போல் முகம் வெளிறிக் கிடக்கிறது. மெல்ல நடந்து ஜன்னல் அருகே நின்று வெளியே பார்க்கிறாள்.

வெளியே அந்த சாமியார்!

ஜன்னல் வழியாக அவரைத் தெளிவாகவே பார்க்க முடிகிறது. அவர் கையசைத்து தன் அருகில் வரச் சொல்கிறார்.

அக்ஷரா மறுவினாடி அவரை நோக்கிச் செல்ல ஆரம்பிக்கிறாள். தன்னை பார்ப்பவர்கள்பார்க்காதவர்கள் என்று எவரைப் பற்றியும் கவலைப்படாமல் நடக்கிறாள், வைர ஊசிப் பட்டுச்சேலை சரசரக்கும் நடை. நகை ஸ்டாண்ட் ஒன்று நடந்து செல்கிற மாதிரி கூட இருக்கிறது.

நேராக வெளியே அசோக மரத்தடி நிழலில் நிற்கும் அந்த சாமியாரை நெருங்கி நிற்கிறாள். சிலர் பார்க்க சிலர் பார்க்காதிருக்க சாமியார் நிதானமாக சிரிக்கிறார். அழுத்தமான சிரிப்பு.

“வா அக்ஷரா…” மிருதுவானஅழைப்பு வேறு.

“சொல்லுங்க சாமி…”

“என்னம்மா இது கோலம்?”

“கல்யாண கோலம் சாமி”

“இந்த கோலம் நமக்கு ஆகாதேம்மா”

“தெரியும் சாமி”

“தெரிஞ்சா இப்படி?”

“என் அப்பா கட்டாயப்படுத்தி இப்படி ஆக்கிட்டாரு…”

“யாரும் நம்மை கட்டாயப்படுத்த முடியாது கட்டாயப்படுத்தவும் கூடாது. தெரியுமா உனக்கு?”

“தெரியும் சாமி நீங்க சொல்ற மாதிரி செய்யறேன் சாமி”

“கிளம்பு என்னோட”

அடுத்த நொடி ஒரு டாடா சுமோ அவர்களை உரசியபடி நிற்க இருவரும் உள்ளே ஏற பறக்க தொடங்கியது அந்த கார்.

டிரைவிங் ஆசனத்தில் மொட்டையடிக்கப்பட்ட ஓர் இளம் பெண்!

ரங்கநாதன் தெரு மூச்குமுட்டிக் கொண்டிருந்தது. சாலைஓரக் கடைகளை கழித்துக் கட்டியும்கூட ஜனநடமாட்டம் குறையவில்லை. ஒருவர் மேல் ஒருவர் படாமல் அந்த தெருவை கடப்பவர்களுக்கு தலாஆயிரம் ரூபாய் பரிசு அறிவிக்கலாம்.

ஒரு ஸ்டேஷனரி ஷாப்பிலிருந்து வெளிப்படுகிறாள் நீலா. உடன் அவளது ஆசை அப்பா கோபால் ராவ். அவர் கைகளில்சிவப்பு

ரிப்பனால் கட்டப்பட்ட பிரசன்டேஷன் பாக்ஸ்.

ஏனோ உம்மென்று இருக்கிறார்.

“டாடி…இன்னும் என்ன கோபம்? கமான் டாடி. சிரிங்க இல்லேன்னா தெரியும் சேதி…”

“சும்மா இரும்மா…சொல்லச் சொல்ல கேக்காம ஒரு டிராயிங்கை போய் பிரசன்டேஷனா பேக் பண்ணியிருக்கே. இந்த மாதிரி ஆயிரம் டிராயிங்கைப் பார்த்தவன்மா அந்த மந்திரி”

“அப்பா. பிரசன்டேஷன்றது கொடுக்கறவங்க பிரியம் சார்ந்தது. அக்ஷராவுக்கு எப்பவும் மாடர்ன் டிராயிங்ஸ்னா ரொம்ப பிடிக்கும் அதான் வாங்கினேன்.மந்திரி மகள்ங்கறதுக்காக அஞ்சு பவுன்ல சங்கிலி வாங்கற வசதி நமக்கு இருக்கலாம். ஆனா அது தப்பு.”

“பிரசன்டேஷன்ல ரிச்நெஸ்ஸை விட ஹார்ட்டச்தான்பா பிரதானமா தெரியணும்”

நீலாவின் விளக்கம் கோபால்ராவுக்கு திருப்திதந்த மாதிரியே தெரியவில்லை. பத்தாததுக்கு சாலைச் சந்தடி வேறு அவர் உடம்பைப் பிசைந்தெடுக்கிறது.

கார் உஸ்மான் சாலையில் நிறுத்தப்பட்டுள்ளது. அதைதேடிச் சென்று கிளப்பி எடுத்துக் கொண்டு வாழ்க்கைச் சவால் போல வளைந்து செல்லும் சென்னை நகர சந்தடிச் சாலைகளில் பயணம் செய்து கல்யாண வீட்டை அடைந்தாக வேண்டும்.

இருவகையில் அண்ணாமலையார் கோபால்ராவுக்கு பரிச்சயம் தலைமைச் செயலாளராக இருந்த போது அமைச்சர் நல்லபழக்கம். அப்படியே அமெரிக்க யூனிவர்சிட்டி ஒன்றில் நீலா படித்தபோது அக்ஷராவும் அங்கே அவளுடன் படித்ததில் நட்புரீதியாக பரிச்சயம்.

இந்த பரிச்சயத்துக்கு அவர் வைத்த கல்யாண பிரசன்டேஷன் விலை. குறைந்தபட்சம் பத்தாயிரம் ஆனால், நீலாவோ வெறும் தொள்ளாயிரத்தில் முடித்து விட்டாள்.

கேட்டால் ரிச்நெஸ்ஹார்ட்டச் என்று கதையடிச்கிறாள். கோபால்ராவுக்கும் மகளை எதிர்க்கும் வல்லமையெல்லாம் கிடையாது. எதிர்க்கும் சக்தி இல்லையென்றாலும், உள்ளுக்குள் புழுங்கலாமல்லவா?

நீலா அதை புரிந்தும் புரியாத மாதிரி காரை கிளப்புகிறாள். ரேஸ்குதிரை ஒன்று பெண்ணாக நான் மாற வேண்டும் என்று சிவனிடம் வரம் கேட்டு மாறினது போல் இருக்கிறது. ஐந்தரை கடந்த உயரம் பிசைந்து பிசைந்து செய்த கைவிரல்கள் கூடுதலாக ஒரு மில்லிமீட்டர் எங்கும் இல்லை, ஆனால் இருபத்திரெண்டு வயதில் மார்பு மட்டும் பழுக்குமா என்று தெரியவில்லை.

பிரேசியர் போடுவதெல்லாம் ஓல்டுஃபேஷன் என்று ஆண்போல முண்டா பனியன்போட்டு மேல்பட்டனை திறந்துவிட்டு ஸ்டோன்வா சட்டை போட்டிருக்கிறாள்.

கூட்டத்தில் எட்டிப் பார்க்கும் பொடிப்பயல் ஒருவனைப் போல அந்த முதல்பட்டன் திறப்பில் அவ்வப்போது கோளம் எட்டிப்பார்க்கிறது.

“மேல் பட்டனைப் போடும்மா…என்று அதன் காரணமாகவோ இல்லை வெறிப்பவர்கள் பொருட்டோ கோபால்ராவ் சொல்வதை நீலா பொருட்படுத்தவேயில்லை.

காரை விரட்டுகிறாள்.

பரமபத கட்டங்களில் பார்த்துப் பார்த்து மேலேறும் வட்டக் கூழாங்கல்போல் கூட்டத்தில் மேலேறுகிறது அவளது கார்.

கோபாலராவுக்கு பயமாக இருக்கிறது.

“எதுக்கும்மா இத்தனை வேகம்?|”

“இதுக்கு பேர் வேகமா டாடி…ஸ்பெய்ன்ல ஐலண்ட் ரோட்ல பறப்போமே அப்ப அதுக்கு பேர் என்னவாம்?”

“ஏம்மா…எந்த கேள்வியா இருந்தாலும் அதுக்கு ஒரு பதிலை ரெடியா வெச்சிருக்கியேசொன்னா கேளும்மா.”

“கேக்கற மாதிரி நீங்க சொல்லுங்கப்பா…”

கோபால்ராவ் அதற்குமேல் பேசத்தயாராக இல்லை. வாயைமூடிக் கொள்கிறார். மீறி வாயைத் திறந்தால் அதன் பிறகு ஒரு வாரத்துக்கு வீட்டில் பேச்சு மூச்சு இருக்காது.

சமயங்களில் நீலா நான்கைந்து நாட்களுக்கு காணாமல் போய் விடுவாள். பத்திரிகையில்விளம்பரம் கொடுக்கும் அளவுக்கு புத்தி போகும்போது அவசியமில்லை என்கிற மாதிரி வருவாள். இதெல்லாம் நிறையப் பழகிவிட்டது கோபால்ராவுக்கு. அதனால் இப்பொழுதெல்லாம் பேசுவதில்லை. ஆனால் உள்ளுக்குள் ஒரு தீர்மானம்.

“மவளே இரு உனக்கு ஒரு திமிர் பிடிச்ச காளையா பார்த்து கட்டிவைக்கிறேன். அவன் வந்தாதான் நீ அடங்குவே!”

கிரீச்ச்ச்…! கோபால்ராவ் நினைத்து முடிக்க, கார் கல்யாண வீட்டை எட்டி நிற்க சரியாக இருந்தது.

என்ன இது…எல்லோரும் கூடிக்கூடி பேசிக் கொண்டு?

காரைவிட்டு இறங்கும் நீலாவும் கோபால்ராவும் திகைத்து போகிறார்கள்.

மந்திரி வீட்டு கல்யாணம் நாதஸ்வரம் பட்டை கிளம்பும் என்று நினைத்தால் இதென்ன இத்தனை அமைதி? என்ன ஆயிற்று. மந்திரிக்கு மாரடைப்பா?

“அது ஒண்ணுதாம்மா பாக்கி” மத்தபடி எல்லாம் வந்தாச்சு போய் பாருங்க” ஒரு விஷமி பூடகமாகச் சொல்ல கோபால்ராவ் நீலாவுடன் நடக்கிறார்.

மண்டபத்து ஹாலில் போலீஸ் ஐ.ஜி. டி.எஸ்.பி சக அமைச்சர்கள் எஸ்கார்ட்டுகள் நடுவில் பிடுங்கிப் போட்ட கடலைச்செடி போல் கிடக்கிறார் அண்ணாமலை.

“டோண்ட் ஒர்ரி சார்…அந்த சாமியார்ப் பய ஆஸ்ரமத்துக்கு இந்நேரம் கமிஷனர் கணேஷ் போயிருப்பார். நிச்சயம் உங்க பொண்ணை கூட்டிக்கிட்டு வந்துடுவார்.”

“வந்து என்னங்க பண்ண…பேர் கெட்டுப் போச்சே? மாப்பிள்ளை கேள்வியா கேக்கறாரு? நாளைக்கே நான் பிடிக்கலைன்னு திரும்ப ஓடிட்டா நான் என்ன பண்ணட்டும்னு திருப்பி கேக்கறாருங்க.”

“அதெல்லாம் பிறகு பாத்துக்கலாம். முதல்ல ஆக வேண்டியத பாருங்க. கணேஷ் எப்படியும் அக்ஷராவோட வந்துடுவார்…”

“நோ…நான் அவ வந்தாலும் ஏத்துக்கமாட்டேன் எப்ப அவ அந்த முக்தி மோட்ச இயக்கத்துல ஒருத்தின்னு தெரிஞ்சு போச்சோ, இனிஅவ எனக்கு வேண்டாம்…”

கத்திக் கொண்டிருந்தான் மாப்பிள்ளை.

“டேய் அப்படியெல்லாம் சொல்லாதேடா…சம்பந்தி காதுல விழுந்துடப் போகுது”

“விழட்டுமே…அவருக்காக நான் ஒரு சாமியார்ப் பொண்ணை கட்டிக்கவா? நல்ல கதையா இருக்கே. கல்யாணம்கறது வாழ்க்கையை அனுபவிக்கிறதுக்காக டாடி. முக்தி மோட்சம்னு மொட்டையடிச்சுகிட்டு காவி கட்டிக்கறதுக்காக இல்லை…”

மாப்பிள்ளையின் பேச்சை நீலாவும் கேட்டுக் கொண்டிருக்கிறாள். அவன் சொல்வது சரிதான். ஆனால் அக்ஷரா எப்படி இப்படி ஆனாள்?

கேள்விக்குள் விழுந்து பதிலுக்காக நெளிந்த போது கல்யாணப் பந்தலுக்குள் ஜீப்பின் வேகப் பிரவேசம்.

உள்ளிருந்து கணேஷ் இறங்குகிறார்.பின்வழியாக அக்ஷரா இறங்குகிறார்.

பட்டும் நகையுமாக பார்க்க ஒரு தேவதையாக தெரிந்த அக்ஷராவாக இல்லாமல் மழுங்க மொட்டையடித்துக் கொண்டு அதை காவிப்புடவை முந்தியால் மூடியவளாக இறங்குகிறாள்.

அனைவரிடமுமே திடுக்.

குறிப்பாக அண்ணாமலைக்கு நெஞ்சில் டயனமைட் வெடிக்கிறது.

“ஐயோ கண்ணு என்ன இது கோலம்”

அக்ஷரா சிரிக்கிறாள். அவள் அம்மா அதைவிட வேகமாக வந்து கட்டிக்கொள்கிறாள்.

“என்னடி இது அலங்கோலம்?”

“அலங்கோலம் இல்லம்மா திருக்கோலம்…”

“ஐய்யோ இப்படி உளர்றியே…”

“உளறலைம்மா…இப்பத்தான் நான் தெளிஞ்சிருக்கேன்.”

“அடியே இப்படியா கல்யாண ஏற்பாடெல்லாம் நடந்துகிட்டு இருக்கும்போது தலைல கல்லை தூக்கிப் போடுவே…?”

“அம்மா நான் கல்லை தூக்கி போடலை. நீங்க தான் போட்டீங்க. நல்லவேளை வாழ்க்கைங்கற கடல்ல நான் சம்சார கப்பல் ஏறி மூழ்கி அழியத் தெரிந்தேன். என் குருநாதர் கலியானந்தரால தப்பிச்சேன். அம்மா…நீயும் இந்த வாழ்க்கைல சம்சார சக்கரத்தில் இருந்து விடுபட்டு என் மாதிரி மாறு. கலியானந்தரைநம்பு. அவர் நித்ய இன்பத்துக்கு உன்னையும் என்னையும் கூட்டிப் போவார்….”

அக்ஷரா நிறுத்தி நிதானமாக தந்த விளக்கம் கேட்டு கூட்டமே வாயடைத்துப் போகிறது பத்திரிகைக்காரர்கள் வேகமாகவே குறிப்பெடுக்கிறார்கள்.

தலையிலடித்துக் கொள்கிறார் அண்ணாமலை எதற்கும் கலங்காதவர்அடுத்தவரை கலக்கியடித்தே பழக்கப்பட்டவர் கண்ணீர்

விட்டு அழுகிறார்.

யோவ் கமஷினர்....அந்த கலியானந்தரை பிடிச்சு நீ இரண்டுல ஒண்ணு பாக்கணும். இல்லேன்னா என் மகளைபோல பல பெண்கள் பெத்தவங்க தலைல கல்லை போட்டுடுவாங்க. அவனை விடக்கூடாது. விடவே கூடாது...”

என்று கத்திக் குமுறுகிறார். கமஷினர் கைபிசைந்து நிற்கிறார்.

“என்னய்யா நிக்கறே...போய்யா போய் அவன் ஆசிரமத்தையே கூண்டோட அரெஸ்ட் பண்ணு என்ன நினைச்சுகிட்டுருக்கான் அந்த சாமியார் பய...”

கத்துகிறார் அண்ணாமலையார். அவரைச் சுற்றி நின்று கொள்கிறது மற்ற அமைச்சர் கூட்டம். ஆறுதல் கூறத் தொடங்குகிறது.

ஆனால் கமிஷ்னர் உடனடியாக வேகப்பட்டு கிளம்பின மாதிரியே தெரியவில்லை.

இதையெல்லாம் பார்த்து அக்ஷரா சிரிக்கிறாள். நானா விருப்பப்பட்டு இப்படி ஒரு பாதையை தேர்ந்து எடுத்ததுக்கு கலியானந்தர் என்ன செய்வார். அவர் ஆசிரமத்தை அழிக்கிறது அப்படி ஒண்ணும் சாதாரண விஷயமில்லை அப்பா. அது முடியவே முடியாது. மீறி யாராவது அந்தக் காரியத்தை செய்ய முயற்சி செய்தா அவங்களை மாத்தற சக்தி கலியானந்தருக்கு உண்டு...

அக்ஷரா சொல்லும் தொனியில் அபார நம்பிக்கை. அவள் மாற்றம் மொத்த கூட்டத்தை ஆச்சரியப்படுத்தி அவளை எட்டாவது அதிசயம் போலபார்க்க வைத்தது.

அண்ணாமலையார் அவள் பேசுவதை விடவும் இப்படி அடுத்தவர்கள் பார்க்க நடக்கும் பேச்சா இருப்பதற்காகவே கூடுதலாக கொந்தளிக்க ஆரம்பிக்கிறார்.

பத்திரிகைகாரர்கள் அல்வா பிரச்சினை கிடைத்து விட்டது என்ற மகிழ்ச்சியோடும் பரபரப்போடும் படம் எடுத்துக் கொண்டு இருக்கின்றனர்.

“கமஷினர்என்னய்யா நடக்குது இங்க. முதல்ல எலலா பிரஸ்ஸையும் வெளியே அனுப்பு என்வீட்டு விஷயம் என்ன ஊர் பார்த்து தெரிஞ்சுக்கற விஷயமா?”

அண்ணாமலையாரின் வெடிப்பைத் தொடர்ந்து மார்பு பகுதிகளில் ஒரு திடீர் வலி, நெஞ்சைக் கையில் பிடித்துக் கொண்டு கீழே விழ ஆரம்பித்தார் அண்ணாமலை.

”ஐய்யய்யோ”….வாயிலும் வயிற்றிலும் அடித்துக் கொண்டு முன் வந்து அழ ஆரம்பித்திருக்கிறார் அண்ணாமலையார் மனைவி அகிலாண்டம்.

அவருக்கு வலி வந்தது மட்டும் அக்ஷராவை என்னவோ செய்தது மெல்ல நெருங்கி வந்தாள்

அண்ணாமலை நிறையவே வியர்த்துப் போயிருந்தார்.

ஹார்ட் அட்டாக்!

அண்ணாமலை பி.ஏ. அலற அவரது உடல் காரில் ஏற கமிஷனர் முதல் சகலரும் பின் தொடர வாடிய முகத்துடன் நிற்கிறாள் அக்ஷரா!

சற்று முன் வரை நகையும் நட்டுமா ராஜகுமாரியாக நின்றவள் துறவறம் மேற்கொண்ட மணிமேகலையாக…

அவள் தோள் மேல் இப்பொழுது ஒரு கரம் விடுகிறது.

நீலா!

திருப்பிப் பார்க்கிறாள் அக்ஷரா!

“என்னடி இதுகோலம் அக்ஷரா!

“சாரி நீலாநான் இப்ப யோக சித்ரா. அக்ஷரா இல்ல…”

“ஐ வான்ட் டு பீ ஆல்ஸோ…”

“வெல்கம். வா என் இயக்கம் உனக்கு முக்தி மோட்சம் தரும். முன் அமைதி தரும்.”

“குட். எப்ப பார்க்கலாம் உன் கலியானந்தரை?”

“நம்ம கலியானந்தரைன்னு சொல் நீலா. எப்ப வேணா பார்க்கலாம்.”

நீலாவின் பேச்சு பக்கத்திலேயே நிற்கும் கோபால்ராவை குபீர் என்று வியர்க்க விட்டது.

“அம்மாடி…என்ன இது? அவதான் புரியாம பேசறான்னா நீயுமா?””உஸ்!”நீலா அப்பாவுக்கு எதிரே உதட்டில் ஆள்காட்டி விரலை

பதித்து அமைதிப்படுத்துகிறாள்.

ஊஹும் அடக்குகிறாள்.

புரிந்துவிட்டது கோபால்ராவுக்கு.

நீலாவுக்கு இப்பொழுது வேலை கிடைச்சாச்சு!

(கண் திறக்கிறார் அண்ணாமலையார்)

காதோரமாக பொய் சொல்லப்படுகிறது.

"சார்...உங்கமக மனசு மாறிட்டாங்க. நீங்க கவலைப்பட வேண்டாம் உங்க மாப்பிளையும் அடுத்த முகூர்த்தத்தில் தாலி கட்டிட்டா போச்சுன்னு சொல்லிட்டார்..."

அப்பாடா...! அண்ணாமலையாரின் வலி மார்பில் இதம் பரவுகிறது. உடம்பெல்லாம் முறுக்கிக் கிடந்த நரம்புகள் தளர்ந்து சமனமாகின்றன. ரத்தம் டிராபிக் ஜாமின்றி ஓட ஆரம்பிக்கிறது.

மரண வாசலில் தாடையை தடவியபடி அமர்ந்து கொண்டிருந்த எமன் ஏமாற்றமுடன் எழுந்து கொள்கிறான்.

பொய் சொன்ன அதிகாரியை பார்க்கிறான்.

டாக்டர்கள் அவரை பாராட்டிக் கொண்டுள்ளனர்.

"குட்... எப்படியோ ஒரு பொய்யை சொல்லி மனோரீதியா அவரை காப்பாத்திட்டோம். ஆனா அண்ணாமலையார் ஒண்ணும் விரல் சூப்பற பாப்பா இல்லை. அவரோட மகளை பார்க்கணும்னு சொல்வார். அவ வரணும். வர வைக்கணும். இஸிட் பாசிபிள்?"

"அங்கதான் டாக்டர் குழப்பமா இருக்கு..."

"என்ன கமிஷனர் நீங்க... கலியானந்தர் முக்திமோட்ச இயக்கம் என்ன இதெல்லாம்? பெண்கள் காதலுக்காக ஓடிப் போவாங்க இயற்கை! பக்திங்கறதுக்காக ஓடுவாங்களா...?

கலியுகம் என்ன ரிவர்ஸ் போக ஆரம்பிச்சுச்சா?

"இட்ஸ் நாட் ரிவர்ஸ் நீங்க நினைக்கிற மாதிரி இல்ல டாக்டர். நம்ம பெண்களுக்கு வாழ்க்கைல இருக்கற பரபரப்பு, அழுத்தம் பிடிக்கலைன்னு நினைக்கறேன். அதான் இப்படி எலலாம் நடக்குது."

“என்ன பரபரப்புஅழுத்தம்? அதுக்கு வழி தவம் கிடையாது. தவம்கறது எவ்வளவு பெரிய விஷயம் தெரியுமா?”

“இல்லேங்கறது…. நமக்கு தெரியாது. ஆனா அவங்களுக்கு தெரியமாட்டேங்குதே.”

“தெரிய வைக்கணும்”

“இப்போதைக்கு சாத்யமில்ல டாக்டர். ஏன்னா அந்த கலியானந்தருக்கு நம்ம மந்திரிகளில் ஒருத்தரே பக்தர். இங்க இவரால பிரஷர் கிரியேட் பண்ணினா அங்க அவரால் அது ரிலீஃப் ஆகுது. நாங்க என்ன பண்ணட்டும்…”

“அப்படின்னா அண்ணாமலையார் கதை முடிஞ்சு போயிடும் மிஸ்டர் கமிஷனர்.”

“சாரி… இதுல சீஃப் மினிஸ்டர் தலையிட்டாதான் சாத்யம்”

(முதல்வர் தலையிட்டிருந்தார்)

கலியானந்தர் பற்றிய சகல அறிக்கைகளும் டேபிள் மேல் படித்து முடித்த நிலையில் நிமிருபவர் எதிரில் கலியானந்தர் பக்தராகிவிட்ட அந்த மந்திரி.

“சார்….கலியானந்தர் நிஜமாலுமே தெய்வீக புருஷர். எனக்கு வர இருந்த பல ஆபத்தை முன்கூட்டியே எனக்கு சொல்லி என்னை காப்பத்தினவர். அவரை நம்புங்க…”

முதல்வர் பலமாக யோசிக்கிறார். பின் சிரிக்கிறார். “சரி நீங்க போகலாம்” ஒரு வார்த்தையில் அந்த மந்திரிக்கு பதில்.

அறை காலியாகிறது.

டேபிள் மேல் நாளிதழ் வார இதழ்கள் எல்லாம் கலியானந்தரை பற்றி எழுதிய செய்திகள் தலையங்கங்கள் என்று கலியானந்தரை அயோக்கியன் என்றால் அடுத்தது முக்தன் என்கிறது.

ஒரு பத்திரிக்கை அவன் கலரியை காக்க வந்த தூதன் என்கிறது. அந்த பத்திரிகை ஆசிரியருக்கு பெண் பிள்ளையே இல்லையோ என்னவோ?

கலியானந்தர் நல்லவரோகெட்டவரோ? சட்டத்துக்கு தேவை குற்றம். அதற்கு ஆதாரம். இந்த வினாடி அப்படி ஒரு விஷயம் போலீஸ்வசம் இல்லை. இன்டர்காமை எடுக்கிறார் முதல்வர். மூன்றாவது நொடி

தலைமைச் செயலாளர் கூனல் உடம்புடன் உள் நுழைகிறார்.

“கலியானந்தர் பற்றி அந்த இயக்கம் பற்றி நூறு சதவீதம் சரியான ரிப்போர்ட் வேணும். 24 மணி நேரத்துக்குள்ள…”

“ஏற்பாடு செய்திட்டேன் சார். க்ரைம் பிராஞ்ச் மூலமா சாந்தாங்கற வயதான அம்மா. அந்த இயக்குத்தில் இப்ப சேர்ந்துட்டாங்க. ஒரு மணி நேரத்துக்கு ஒரு தடவை செல் மூலமா தகவல் தந்துகிட்டிருக்காங்க….”

“நல்லது…அண்ணாமலையார் எப்படி இருக்கார்….”

“மகள் மனது மாறிட்டதா சொல்லி வெச்சிருக்கிறதால் ஓ.கே. ஆனா வரலைன்னா நிச்சயம் காப்பாத்தறது கடமாம்”

முதல்வர் முகம்கோபத்தில் மாறுகிறது.

ஹீம்… எப்படி எல்லாம் பிரச்சினைகள்…!

ஆஸ்ரமம் சுறுசுறுப்பாக இருக்கிறது.

அடேயப்பா எத்தனை இளம் பெண்கள்! ஆளாளுக்கு காவி உடுத்தி மொட்டையடித்துக் கொண்டு புத்தபிட்சுக்கள் போல தோற்றம் தந்தபடி தெரிகின்றனர்.

நீலா வித்யாசமாக மிடிஸ்கர்ட் என்கிற உடையில்… உடன் அக்ஷ்ரா!

“வா.. கலியானந்தரை பார்க்கறதுக்கு முந்தி எங்க சீஃப் சிம்மானந்தாவை பார்ப்போம்…”

சிம்மானந்தா என்று அக்ஷ்ரா வர்ணித்த நபர் ஒரு மேடை போன்ற உயரமான இடத்தில் அமர்ந்திருக்கிறார். தியான கோலம்.

அருகே சென்று நிற்கிறாள் அக்ஷ்ரா. நீலா திடமாக கவனிக்க ஆரம்பிக்கிறாள்.

கண்களை திறக்காமலே பேச ஆரம்பிக்கிறார் சிம்மானந்தா.

“வாம்மா நீலா… வந்துட்டியா?”

நீலாவிடம் அதிர்ச்சி. அக்ஷ்ராவிடம் அதைவிட.

“பிரபு…உங்களுக்கு எப்படி தெரியும் நீலா என் கூட வந்திருக்கிறது”

அக்ஷரா கேட்கிறாள்.

“என்னம்மா இது பித்துக்குளித்தனமான கேள்வி. இதெல்லாம் ரொம்ப சாதாரணமா. நம்ம இயக்கத்துல சேர்ந்து நாங்க சொல்லி கொடுக்கற யோக வித்தைகளை கத்துகிட்டா இதென்ன, நீ புழு பூச்சிகளோட மனசை கூட தெரிஞ்சுக்க முடியும்.”

சிம்மானந்தா போட்ட போட்டில் நீலாவிடம் பிரமிப்பு என்றால் தான் ஆழம் பார்க்க வந்திருப்பதையும் சிம்மானந்தா கூறிவிடுவாரோ? கூறுகிறார்.

“நீலா…. நீ இந்த இயக்கத்தை புரிஞ்சு சேர வரலைம்மா. ஆழம் பார்க்க வந்துருக்கே. தப்பில்ல. நல்லா பாரு. ஆனா முடிவுல நீயும் ஒரு சன்னியாசினியா ஆயிருவே. ஏன்னா உன் ஜாதகப்படி உனக்கு சன்யாச யோகம் ஆரம்பம் ஆயிடிச்சு. அதான் இங்க வந்திருக்கே..”

அக்ஷரா என்னும் யோக சித்ரா திடுக்கிட்டு நீலாவை பார்க்க நீலாவிடம் கொத்தாக மவுனம்.

“மவுனமா இருக்காதே பேசு… பேசினால்தான் தீர்வு கிடைக்கும். உனக்கு என்ன சந்தேகமோ கேள்…”

சிம்மானந்தா கண்களை திறக்காமலே பேசுவது நீலாவை சற்று கலக்காமல் இல்லை.

“மிஸ்டர் சிம்மானந்தா உண்மையைச் சொல்லுங்க நீங்க யார்?”

“இந்த உலகத்து ஜீவராசிகள் ஒரு அற்ப ஜீவன். ஆனா பரமாத்மாஜீவாத்மா தத்துவத்தை புரிந்து கொள்ள முடிந்த ஒரு புண்ணிய புருஷன். காரணம் என் குருநாதர் கலியானந்தர். குருவே சரணம்.”

அக்ஷரா குறுக்கிடுகிறாள்.

“நீலா இப்படி எல்லாம் பேர் சொல்லி கூப்பிடக்கூடாது”

பதில் சிம்மானந்தரிடம் இருந்து வருகிறது.

“அக்ஷராவாகிய யோக சித்ரா நீ சும்மா இரு. அவங்க மனசு திறக்கட்டும். உள்ள இருக்கறது எலலாம் வெளிய வரட்டும். பேசினா தானே நல்லது…”

“பிரபு இப்படி மரியாதை குறைவா உங்கள பேசறத என்னால பொறுக்க முடியாது. இது அபச்சாரம்.”

“பரவால்ல…கோழி மிதிச்சு குஞ்சுகள் முடமாகாது. குஞ்சுகளே

முடமாதுன்னா நான் அதையும் கடந்தவன். விடு அவ பேசட்டும்.”

அக்ஷராவின் அந்த இயக்கப்பற்றுதல் நீலாவை மேலும் திடுக் ஆக்குகிறது.

“நீலா நீ கேளும்மா. உனக்கு என்ன தெரியணும்?”

“உண்மை.”

“எந்த உண்மை?”

“யோகம் தவம்னு பண்ண உங்களுக்கு ஆசையா இருந்தா நீங்க பண்ணிட்டு போங்க. எதுக்காக கூட்டம் சேர்க்கறீங்க. குறிப்பா இளம் பெண்களை. நம்பும்மா… நாங்க சேர்க்கலை. அவங்களா சேர்றாங்க..”

“அவங்களா எப்படி சேருவாங்க? இது என்ன நூறு ரூபாய் கொடுத்தா முன்னூறுரூபாய் தர்றேன்னு சொல்ற சிட்ஃபண்ட் நிறுவனமா அவங்க சேர? இல்ல புடவை நகை தரப்போற கடையா…. அவங்களா சேர…”

“சராசரி பெண்கள் நீ சொல்ற இடங்களுக்குப் போய் சேருவாங்க. ஆனா முக்தியும் மோட்சமும் அடைய நினைக்கறவங்கதான் இங்க வருவாங்க… உன்னை மாதிரி.”

“என்னை மாதிரின்னு சொல்லாதீங்க..தலைகீழா நின்னாலும் அது நடக்காது. இங்க ஏதோ தப்பு நடக்குது…”

“மோட்சத்துக்கு வழி காட்றது ஒரு தப்பாம்மா?|

“எது மோட்சம்?”

“உனக்கு காட்றேன். கிட்டவா…”

நிலாவை இந்த பதில் சற்று மிரட்டியது. பின்னர் சுதாரித்துக் கொண்டு வருவது வரட்டும் என்று அவர் முன் சென்றாள்.

சிம்மானந்தர் கண் திறக்கிறார். சுத்தமாக நீலம் போட்டு கழுவின மாதிரி இருக்கிறது கண்கள் பார்க்க படுதீர்க்கமாக….

அப்படி ஒரு கண்ணை நீலா பார்த்ததேயில்லை. சிம்மானந்தர் முகம் நீலாவிடம் ஊன்றுகிறது. நீலாவிடம் படபடப்புபரபரப்பு.

எல்லாமே அடங்கிப் போகிறது.

“கிட்ட வாம்மா“…செல்கிறார் நீலா.

சிம்மானந்தரின் கரங்கள் நீண்டு அவள் நெற்றிப் பொட்டில் கை பதிக்கின்றன. அடுத்த வினாடி நீலா கண்கள் செருக ஆரம்பிக்கிறது. உள் மனதில் இருந்த எண்ணக்கூட்டங்கள்எலலாம் எங்கோ ஓடி ஒளிந்து மனது வெற்றிடமானது போல ஒரு பிரமை தட்டுகிறது.

“வாயை திறம்மா…அவர் கட்டளைக்கு நாய்க்குட்டி போல கட்டுப்பட்டு வாயைத் திறக்கிறாள். சிம்மானந்தர் கை கட்டை விரலையும் ஆள்காட்டி விரலையும் சேர்த்து வாய்க்கு வெளியே அசைக்க விரல்கள் நடுவில் இருந்து விபூதிபோல் ஒன்று வெளிப்பட்டு வாயில் விழுகிறது. நாக்கு ஈரத்தில் கரைகிறது. சில வினாடிகள் மவுனம்.

பிறகு உடம்பெங்கும் இலேசாவதுபோல் ஒரு உணர்வு உருவாகிறது. ஆகாயத்தில் மிதக்கின்ற மாதிரி எல்லாம் கூட தோன்றுகிறது.

இதுவரை வாழ்ந்ததில் சுத்தமாக அனுபவித்திராத உணர்வு.

அவளுக்கு அப்படி ஆன சில வினாடிகள் கழித்து மெல்ல திரும்பவும் உணர்வு வருகிறது. இப்பொழுது உடம்பு பாரமாகிறது. அத்தனை லேசாகவும் ஆக வேண்டாம். இத்தனை பாரமாகவும் வேண்டாம் என்று கூட தோன்றுகிறது.

நீலா பிரக்ஞை மீளுகிறாள்.

“என்னம்மா எப்படி இருக்கு”… கேட்கிறார் சிம்மானந்தர். நீலா திணறுகிறாள். இதற்கு என்ன பதிலைச் சொல்வது? அவள் திணறியபடி நிற்கும்போதே அருகில் கும்பிட்டபடி வந்து நின்றாள் அந்த வயதான பெண்மணி.

“வாம்மா…க்ரைம் பிராஞ்சல இருந்து வந்துருக்கியா?”

“ஆமாம் பிரபு!”

“என்ன தெரிஞ்சுகிட்டே…?” இந்த உலகத்துக்கே வழிகாட்ற கடவுள் இங்க இருக்கார்னு தெரிஞ்சுகிட்டேன்.

வெந்ததை தின்னுட்டு வேளை வந்தா சாகறதும் ஒரு வாழ்வா பிரபு? இது எதுமே இல்லாம சொர்க்கத்தை இங்க இருந்தே பார்க்க முடியுதே. அதை தெரிஞ்சுக்கிட்டேன். அந்த ஒரு சில நிமிட இன்பமே இப்படி இருக்கே… இப்படியே நாள் பூரா இருந்தா எப்படி இருக்கும்னு யோசிச்சூ பார்த்தேன்…”

“நிச்சயம். இருக்கலாம் உலகத்துல உணவு தான்யம் விளையலையேனு

கவலைப்பட வேண்டாம். மழை இல்லை வறட்சின்னு கலங்க வேண்டாம். நித்ய இன்பத்தை இங்க பார்க்கலாம். முதல் நாள் ஒரு சில நிமிஷம் அப்புறம் அஞ்சு பத்து நிமிஷம் அதற்கும் பிறகு மணிக்கணக்கா. ஆனா இதெல்லாம் இங்க உண்மையா விசுவாசமா இருக்கறவங்களுக்கு மட்டும்தான் கிடைக்கும்"

"நான் இருப்பேன் பிரபு. எனக்கு போலீஸ் வேலைவேண்டாம் இனி…"

"அவசரப்படாதே…அங்க இருக்கற நல்ல ஜீவன்களுக்கு நீ குருவாகலாம். அவங்களையும் இதுல நீ சேர்க்கலாம்."

"உத்தரவு குரு!" சிம்மானந்தர் சாந்தா என்ற அந்த போலீஸ்கார பெண்மணியிடம் பேசிவிட்டு நீலா பக்கம் திரும்பி "என்னம்மா…என்ன சொல்றே?" கேட்கிறார்.

நீலா சங்கடமாக நெளிகிறாள்.

"யோசிச்சு பதில் சொல். உனக்காக இந்த ஆசிரம கதவு திறந்தே இருக்கும் எப்பவும்"

நீலா மவுனமாக திரும்ப ஆரம்பிக்கிறாள். அக்ஷரா வாசல்வரை வந்து வழியனுப்புகிறாள்.

கலகலப்பான நீலா இப்படி தீவிர சிந்தனையோடு மொட்டைமாடியில் நடந்து கொண்டு இருக்கிறாள்?

எட்டிப்பார்க்கும் கோபால்ராவுக்கு வயிற்றில் புளி கரைய ஆரம்பிக்கிறது.

"நீலா மைடியர் டாட்டர்…" அழைக்கிறார்

திரும்புகிறாள்.

"என்னம்மா என்ன ஆச்சு…எதனால இப்படி ஆயிட்டே?"

"எப்படி?"

"நீ ஒரு நிமிஷம் பேசாம இருந்து பார்த்தது இல்லியே…"

"இப்ப பாருங்க…"

"என்னம்மா பதில் இது ஏன் இப்படி இருக்கே?"

"நல்லாதானே இருக்கேன்."

“இப்படி இருக்கறதுக்கு பேர்தான் நல்லான்னா நீ நல்லா இருக்காதேம்மா…”

சிரிக்கிறாள் நீலா. சாதாரணமாக கலகலவெனறு சிரிப்பவள் மிகவும் அழுத்தமாக சிரிக்கிறாள்.

“இது என்னம்மா சிரிப்பு…”

“சிரிப்புல கூட ஜாதி உண்டாப்பா…இது ஒரு சிரிப்பு அவ்ளோதான்”

“சரியில்லம்மா. அந்த ஆஸ்ரமத்துக்கு போயிட்டு வந்ததுல இருந்தே நீ சரியில்லை”

“ஏம்ப்பா அப்படி சொல்றீங்க. இதுக்கு முந்திதான் தப்பா இருந்துருக்கேன். இப்ப சரியாதாம்ப்பா இருக்கேன்…”

“அப்படின்னா…”

“நானும் முக்தி மோட்ச இயக்கத்துல சேர்ந்துடுவேன்னு பயப்படறீங்களா?”

“இல்லம்மா…நீ சேர்ந்தா உன்னோடு சேர்ந்து நானும் சேர்ந்துடுவேன். உனக்கு ஏற்பட்ற நல்லது கெட்டது எனக்கும் ஆகிட்டுப் போகட்டும்.”

“ஏம்ப்பா சேர முடியாம தடுக்க முடியாதா உங்களால்”

“முடியாதும்மா….உனக்கு ஒரு விஷயம் தெரியுமா?”

“என்னப்பா…”

“நியூஸ் கேக்கலையா”

“என்ன?”

“அண்ணாமலையார் போய் சேர்ந்துட்டார். அவரை காப்பாத்த செய்த உத்தி பலன் தரலை அந்த பெண் கடைசி வரை அவரை பார்க்கலை. அவருக்கும் பொய் சொல்றாங்கன்னு தெரிஞ்சி போச்சு. தாங்கிக்க முடியலை. மண்டையை போட்டுட்டார்”

“நிஜமாவா?”அதிகபட்சமாக அதிர்கிறாள்… நீலா.

“ஆமாம்பா…அந்த முக்தி மோட்ச இயக்கத்துல நிஜமாலுமே ஏதோ சக்தி இருக்கோ என்னவோ…எதுக்கு அண்ணாமலை மாதிரி வருத்தப்பட்டுகிட்டு..ஒத்துகிட்டா?”

நீலா மவுனமாக நிற்கிறாள்! அந்த வினாடி ஆகாயத்தில் மிதந்த சுக உணர்வு. நினைவில் எழும்புகிறது. திரும்ப அப்படி ஒரு சுக உணர்வு வேண்டும் போல தோன்றுகிறது.

அது எப்படி சாத்யம்ஒரு மனிதன் பார்த்தே இத்தனை சுகம் தர முடியுமா? கூடவே வேறு ஏதோ கூட தந்தாரே அந்த மனிதர்.

ஆங்..விபூதி!

விபூதியை கையில் வாங்கி சோதித்து பார்க்க வேண்டும். அதில் ஏதாவது போதை வஸ்து கலந்திருக்குமோ?கேள்வியோடு கீழே வருபவளை டீப்பாய் மேல் உள்ள செய்திதாள்கள் வரவேற்கின்றன.

செய்தித்தாள்களில் அவள் சந்தேகப்பட்ட விஷயத்துக்கான பதில்.

ஆஸ்ரமத்தை போலீஸ் அணு அணுவாக சோதனை செய்தது. எந்த மோசமான தடயங்களும் கிடைக்கவில்லை. விபூதி பிரசாதம் போன்ற பொருட்களையும் ரசாயன பரிசோதனைக்கு உட்படுத்தியதில் ஏதும் இல்லை என்று தெரியவந்தது.

கலியானந்தர் நிஜமாலுமே ஆயிரம் ஆண்டுகளுக்கு ஒருமுறை தோன்றும் மகான் என்று ஓலைச்சுவடிகள் கூறுவதாக வைத்தீஸ்வரன் கோயில் நாடிசோதிடர் ஒருவர் ஆதாரத்துடன் கூறியுள்ளார்.

நீலாவுக்கு குழம்புகிறது.

இது எப்படி சாத்யம்?

ஆசிரமம் நிரம்பி வழிந்து கொண்டிருக்கிறது. கூட்டமான கூட்டம். அன்று கலியானந்தர் பேசப் போவதாக தகவல். கலியானந்தர் அபூர்வமாகத்தான் பேசுவாராம்.

பேச்சு சக்தியை கலைக்கும் ஒரு வீணான விஷயம். என்பது அவரது ஸ்லோகங்களில் ஒன்று. இன்று பேசி எந்த சக்தியை கலைக்கப் போகிறார்? கேள்வியோடு கூட்டத்தில் நின்று கொண்டிருக்கிறாள் நீலா.

எதிரே பிரமாதமான அலங்காரத்தோடு மேடை!

பூவாசம் தூள்கிளப்பிக் கொண்டிருக்கிறது. அங்கும் இங்குமாக ஆசிரம சன்னியாசிகளின் அலைமோதும் நடை. அவ்வளவு பேருமே பணக்கார வீட்டு பிள்ளைகள் கலெக்டர் தாசில்தார் எம்.எல்.ஏ.எம்.பி என்கிற வர்க்கத்தின் வாரிசுகள்.

“நினைத்தால் அமெரிக்காநின்றால் ஐரோப்பா” என்று உலகை சுற்றமுடிந்தவர்கள் கறுப்பு பணத்தை கட்டி வெள்ளைப் படுத்திக் கொள்ளலாமா என்ற யோசனையில் இருப்பவர்கள்.

இவர்களா இப்படி முக்திமோட்சம் என்று…?

நீலாவின் சிந்தனை சிரசில் பரவிக் கொண்டிருக்கிறது.

மைக்கை டொக் டொக் என்று கொட்டி ஒருவர் ஓம் கலியானந்தாய நமஹ என்று முணுமுணுக்க ஆரம்பிக்கிறார்.

அது கூட்டத்தில் எதிரொலிக்கிறது. ஒரு பக்கம் வியப்பாக இருக்கிறது. சாதாரணமாக நேரம் கேட்டால் எவ்வளவு என்று சொல்லத்தயங்கும் ஜனங்களா இன்று இப்படி..போகிற வழியில் ஒரு தபால்கார்டை பாக்ஸில் போட்டுவிட முடியுமா என்று கேட்டால் நான் வேறு பக்கமா போறேன் என்று கூறும் ஜனங்களை இத்தனை ஒற்றுமையாக ஒரு மூன்றாவது மனிதனை துதிபாடிக் கொண்டிருக்கின்றனர்?

நீலாவுக்குள் ஆச்சரியம் அலைபுரண்டு கொண்டிருக்கிறது. பத்திரிகையாளர்களும் வந்திருக்கின்றனர்.

டயானா மரணத்திற்கு பின் அவர்களுக்கு சற்று மரியாதை குறைந்து விட்டதை நன்றாக உணர முடிகிறது. அவர்களை சீண்டு வார் இல்லை.

நீலா பார்த்துக் கொண்டிருக்க ஓம் கலியானந்தாய நமஹ தொடர்ந்து கொண்டிருக்கிறது.

நடுவில் நீலாவை கடக்கிறது ஒரு உருவம்.

யாரது…கல்யாணசுந்தரம் அங்க்கிளா? சூப்ரெண்ட் ஆப் போலீஸ் கல்யாண சுந்தரமா?

அவரும் நீலாவை பார்க்கிறார். ஏனோ முகத்தை திருப்பிக் கொள்கிறார்.

“அங்க்கிள்..” விடுவதாக இல்லை நீலா. அவரும் காதில் வாங்கிக் கொள்வதாக இல்லை.

“கல்யாண சுந்தர் அங்க்கிள்..” பேரோடு அழைப்பொலி அடுத்து கிளம்ப அரைமனதாக திரும்புகிறார் எஸ்.பி.கல்யாணசுந்தரம்.

“எங்க இவ்வளவு தூரம்?”

“உஸ்ஸ்…இது தெய்வீகமான இடம் சப்தம் போடாதே…”

“வெங்காயம் உங்ககூட கொஞ்சம் பேசணும்.” அவர் நெருங்கி வருகிறார்.

“நீ என்ன கேக்கப் போறேன்னு தெரியும். இந்த இடத்தை பற்றி சர்ச்சை இருக்கும்போது நீங்களும் வந்திருக்கீங்களே எதுக்குன்னு தானே?”

நீலாவின் போனிடைல் சிரம் ஆமோதிக்கிறது.

“வெளியே வா சொல்றேன். நீ ஒரு விடாக் கண்டிங்கறதுதான் தெரியுமே”

இருவரும் ஆஸ்ரம பந்தலுக்கு வெளியே வருகின்றனர். ஒரு ஓரமாக நிற்கின்றனர்.

“எப்படி இருக்கார் உங்க அப்பா?”

“அவருக்கென்ன வயதுக்கு தகுந்த உளறல் இருமல்னு அமோகமா…”

“உன் குறும்பு மாறவே இல்லை. என்ன விஷயம்?”

“நீங்கதான் சொல்லணும் கலியானந்தர் பற்றி…”

“இப்படி சீஃப் மினிஸ்டர் மாதிரி கேட்டா எப்படிம்மா?”

“அவர் இப்படிதான் கேட்டாரா..பலே”

“தோ பாரு…நானறிய கலியானந்தர் ஒரு கிரேட் மேன். நிஜமாலுமே த்ரிகால ஞானி!”

“எப்படி…எப்படி…

“இதெல்லாம் சொல்லிப் புரியற விஷயமில்லை. அனுபவிச்சு தெரிஞ்சக்கணும். மனசுல இருக்கறதை அப்படியே சொல்றாரு. நிறைய ரேடியேஷன் பவர் இருக்கு. கைப்பட்டா உடம்பே சிலிர்க்கிறது. வியாதிய குணமாக்கறாரு. ஐ திங்க்…கடவுளோட பிறப்பு அவர்”

“என்ன அங்க்கிள் இப்படி அவருக்கு ஜால்ராபோட்றீங்க. மனித சக்தியோட எல்லை புரியாம பேசறீங்க?”

“புரிஞ்சுதான் பேசறேன். நீயும் வேணும்னா பார் அவரை நெருங்கு புரிஞ்சுக்குவே. அந்த கண்ணை உன்னால பார்க்க முடியாது.

“பாத்துட்டா”

“இது என்ன பேச்சு நான் உன்னை மாதிரி ஆழம் பார்க்க வரலை. அவஸ்தை படவும் தயாரில்லை”

“ஒரு போலீஸ் அதிகாரி பேசற பேச்சா இது? ஜனங்க ஏமாந்துடாம தடுக்கற பொறுப்பு உங்களுக்கு இருக்கா இல்லையா?”

“இங்க யாரும் ஏமாறலை. நீ வேணா பார் நீதான் ஏமாறப் போறே? என் டிபார்ட்மெண்ட் எலலா ஆராய்ச்சியும் பண்ணிடிச்சு. தப்பா ஒரு விஷயமும் கிடையாது.”

எஸ்.பி. பேசிவிட்டு அகலும் வேகத்தில் இதற்கு மேல் உனக்கு பதில் சொல்ல விருப்பம் இல்லை என்கிற பாவனை பிறக்கிறது.

நீலாவுக்கு முதல் தடவையாக குழப்பமாக இருக்கிறது. ஒருக்கால் இவர்கள் சொல்வதுதான் நிஜமோ?

கேள்விக்குள் வலை பின்னும்போது கலியானந்தர் பேச ஆரம்பித்திருந்தார். மைக் வழியாக காதில் பாய்கிறது பேச்சு… என் அன்பான பக்த சீடர்களே! அனைவருக்கும் என் ஆசீர்வாதங்கள். உங்களுக்கு எல்லாம் திருவருள் இருக்கிறது. அதனால்தான் இந்த முக்தி மோட்ச அமைப்பு நாடி வ்நதிருக்கிறீர்கள்.

இதை முற்பிறப்பில் நீங்கள் செய்த புண்ணியம் என்று கூட சொல்வேன்.

பாவிகள்தான் இந்த அமைப்பின் பக்கம் வரமாட்டார்கள். தவறாக பேசி மேலும் பாவம் செய்வார்கள். அவர்கள் செய்துவிட்டு போகட்டும். அவர்கள் பாவங்களை தாங்கிக் கொண்டு அவர்களையும் புண்ணியவானாக்கத்தான் நான் அவதாரம் எடுத்திருக்கிறேன்.

அது பின்னர் நிகழும். இப்பொழுது நீங்கள் இந்த அமைப்பின் பெருமைபற்றி உலகம் முழுவதும் கூறவேண்டும். உங்களுக்கெல்லாம் ஒன்று சொல்வேன் எப்பொழுதும் மஞ்சள் ஆடையையே அணியுங்கள்.

அதேபோல சதா தியானத்தில் ஈடுபட்டு இறைவனை உங்களில் காண தயாராகுங்கள்.

உங்கள் சொத்து சுகங்களை நீங்கள் இந்த அமைப்பிற்கு தானமாய் தரவேண்டும் அதைக் கொண்டு தொடங்கப்படும் அறக்கட்டளை அமைப்பில் லட்சோப லட்சம் ஏழைகள் பயன் பெற வேண்டும்.

நான் கூறுவது போலபயிற்றுவிப்பது போல தியானம் செய்யுங்கள். உங்கள் உடல் ஒடுங்கும். உள்ளம் ஒளிபடும். இறைவன் தெரிவான்.

உண்ணாமல் கொள்ளாமல் நித்ய இன்பம் பெறலாம். நான் அதற்கு வழி காட்டுகிறேன். என்னை பின் தொடருங்கள்.

நான் நாராயணன்நான் பரமசிவன்நான் கவுதமன் நான் மகாயேசுநான் அல்லா…

பேச்சு நீண்டு கொண்டே போகிறது. நீலா கேட்டு கொண்டிருக்கிறாள். கலியானந்தருக்கு மிக அருகில் அக்ஷரா அமர்ந்து கொண்டு அவர் பேசுவதை மெய்மறந்து கேட்டுக் கொண்டிருக்கிறாள்.

பேசி முடிக்கட்டும்…இந்த கலியானந்தரை நேரில் சந்திக்க முடிகிறதா என்று பார்ப்போம்..மனம் தீர்மானிக்கும்பொது கலியானந்தர் பேச்சு முடிந்து விட்டிருந்தது.

மெல்ல நீலா கூட்டத்தில் நீந்தி அக்ஷராவை நெருங்கி அழைக்கிறாள். அவளும் திரும்பிப் பார்க்கிறாள்.

கூட்டம் இப்போது கண்மூடி தியானிக்க தயாராகிக் கொண்டிருக்கிறது. அக்ஷரா முதலில் தியானம் என்கிற மாதிரி சைகை காட்டி விட்டு கண்களை மூடுகிறாள்.

வா யோகசித்ரா!கலியானந்தர் அழைப்பில் யோகசித்ராவான அக்ரா அவர் முன் சென்று காலடியில் விழுந்து வணங்கி எழுந்திருக்க, பின்னாலேயே நீலா.

“ஸ்வாமி..யோகசித்ரா தன் மனோதிடத்தை நிரூபிக்க ஒரு கன்னி யோகி. கல்யாண வாழ்க்கையை உதறினதோட அப்பாவோட மரணத்தையும் ஒரு சாதாரண நிகழ்ச்சியா எடுத்துக்கிட்டு இங்கேயே தங்கிட்டா. உங்களோட மகா பார்வையும், தீட்சையும் யோகசித்ராவுக்கு கிடைக்க ஆசீர்வாதம் செய்யுங்க…” சிம்மானந்தரின் சிபாரிசு வேறு சேர்ந்து கொள்ள கலியானந்தர் மகிழ்ச்சி ததும்பும் முகத்தோடு பார்க்கிறார்.

“ரொம்ப சந்தோஷம்மா…உன் மனோ திடத்தையும் பற்றுதலையும் பாராட்டறேன். என் சார்பா நீ போறியா?”

“உத்தரவு பிரபு…”

“மகிழ்ச்சி மனம் அடங்கிட்டதை பார்க்கறேன். உடம்பு அடங்கிடுச்சா?”

மவுனிக்கிறாள். “அக்ஷரா அதையும் அடக்கணும். அப்பதான் குண்டலினி வசப்படும்”

“அப்படியே ஆகட்டும் பிரபு.”

“ஆகட்டும் பிரபு…”சொன்ன கையோட அவரது விரல்கள் ஒன்று கூடி கரகரவென திரிப்பது போல செயல் பட விபூதி உதிர்கிறது.

“வாய்ல போட்டுக்கோ. மகா இன்பம், மகா இன்பம்”

அதே போல வாயில் அது கரைந்த மறு நொடி அக்ஷராவுக்கு உடம்பு இல்லாதது போல ஒரு உணர்வேற்படுகிறது.

சிம்மானந்தர் நீலாவை அடுத்து அறிமுகப்படுத்துகிறார்.

“இந்த பெண் பெயர் நீலா. நமது இயக்கத்துல சேர வந்திருக்கா. ஆனா நம்பிக்கை இதுவரை ஏற்படவில்லை இங்க தப்பு நடக்கிறதா நினைக்கிறா”

துளியும் கோபமின்றி சிரிக்கிறார் கலியானந்தர்.

“சிம்மானந்தா…இந்த பெண்ணை சுதந்திரமா நடமாட விடுங்க. யாரும் எந்த எதிர்ப்பும் காட்டக்கூடாது. யோசிக்காம ஒத்துக்கற சீடர்களை விட இப்படி ஏன் எதற்கு எப்படிங்கற கேள்வி கேக்கற சீடர்கலைதான் எனக்கு பிடிக்கும்.

இவங்கதான் பின்னால பெரிய அளவுல வருவாங்க”

கலியானந்தரின் பதில் நீலாவை வியப்பிலாழ்த்துகிறது. அக்ஷரா நீலாவைசற்று அனுதாபத்துடன் பார்க்கிறாள். கலியானந்தர் எழுந்து கொள்கிறார்.

“பிரபு…”நீலா தான் அழைக்கிறாள் கலியானந்தர் திரும்பி பார்க்கிறார்.

“என்னை மன்னிச்சிடுங்க.” நான் இனி உங்க சிஷ்யை. உங்க பெருந்தன்மை தெரியாமஅருமை புரியாம தப்பாசிந்திச்சுட்டேன். அதுக்கு தண்டனையா…”

அதற்குமேல் பேசாமல் ஹேண்ட்பேக்கில் கையை விட்டு ஒரு சாவிக் கொத்துடன் கூடிய பேனாக்கத்தியை எடுத்து நறுக்கென்று மணிக்கட்டை அறுத்துக் கொண்டு ரத்தத்தை பாய்ச்ச ஆரம்பிக்கிறாள்.

கலியானந்தருக்கு ஒரு வினாடி அதிர்ச்சி ஏற்படுகிறது.

“என்னம்மா நீ. இப்படியா நடப்பே? வார்த்தைல சொன்னா போதாதா என்ன?”தன் இடத்தைவிட்டு இறங்கி வேகமாக வருபவரின் மேல்

மயங்கி விழுகிறாள் நீலா!

ஐய்யய்யோ!

சாமயோகம் செய்ய வரச்சொல்லியிருந்தாரே பிரபு. கலியானந்தர்?

கிளம்பிக் கொண்டிருக்கிறாள். அக்ஷரா கிளம்பு முன் நீலாவை ஒரு பார்வை.

நீலா இப்பொழுது ஆஸ்ரமத்தில்... ஆசிரமத்தவர்களின் அபரிமிதமான உச்சரிப்பில்.

“எப்படி இருக்க நீலா?”

“நல்லா இருக்கேன். ஆமா நீ எங்க...?”

சாமயோகப் பயிற்சி தரேன்னு சொல்லியிருக்காரே பிரபு?

“கொடுத்து வச்சவ நீ. ஆமா எனக்கும் அந்த பயிற்சி தருவாரா பிரபு?”

“ஏன் தராம...நான் ஆஸ்திரேலியாவுக்கு நீ சிலோனுக்குன்னு போகப்போறோம். உன் பற்றுதல் பிரவுக்கு ரொம்ப பிடிச்சிருக்கு...”

“ரொம்ப சந்தோஷம் அக்ஷரா. நீ பயிற்சியை முடிச்சுட்டு வா. நான் அப்புறமா பயிற்சிக்கு போறேன்.|

“நிச்சயமா. இந்த உலகத்துல இன்பதுன்பங்கள் இனி நம்மளை ஒண்ணும் செய்யாது நீலா. சரி நான் வரட்டுமா?”

அக்ஷரா கிளம்புகிறாள். ஆஸ்ரமம் அமைதியாக இருக்கிறது. சாமியார்களைவிடவும் சாமியாரிணிகள் மிக அதிகம். எல்லோரும் தம்தம் அறைகளில் உறங்கும் முன் செய்யப்போகும் யோகப்பயிற்சி ஒன்றில் இருக்க அக்ஷராவின் கால்கள் கலியானந்தரின் இருப்பிடம் நோக்கி நடக்கின்றது.

அந்த இடமும் வருகிறது. கதவு திறக்க உள்ளே நுழைகிறாள் அக்ஷரா. கிட்டதட்ட சொர்க்கலோகத்தை நினைவுபடுத்தும் சூழல். ஏ.சி.குளிர் உடம்பை உலுப்புகிறது. அங்கங்கே பட்டு மெத்தை திண்டுகள். ஒரு யோகியின் இடமா இது இல்லை ஒரு உல்லாசியின் இருப்பிடமா என்று நினைக்கும்படி... கலியானந்தர் அதோ படுக்கையில்ஆனால் முழு நிர்வாணமாக பார்க்க பகீர் என்கிறது அக்ஷராவுக்கு.

என்ன இது இப்படி? யோசிக்கும்முன் அவரது சிரிப்பு அவளை கலைக்க

ஆரம்பிக்கிறது.

கலியானந்தர் புரிந்ததுபோல பேசுகிறார்.

“உன் உடம்பு அடங்க நான் சொல்லிதரப்போற சமயோகப் பயிற்சிக்கு நான் இப்படித்தான் இருக்கணும் யோகசித்ரா. நீயும் ஆடை அணியாதேகளை!”

சத்தியத்துக்கு கட்டுப்பட்ட யானைபோல அவர் சொன்னதை செய்கிறாள்.

“வா இந்த மகாபிரசாதம் சாப்பிடு” அழைத்து விரல்களை கொடுக்க விபூதி விழுகிறதுசாப்பிட்ட நொடிப்பொழுதில் உடம்பு இருந்தும் இல்லாது போகிறது.

“வா வந்து என்னை கட்டிப்பிடி. உலகத்தின் பெரிய இன்பத்தை உனக்கு நான் உணர்த்த போறேன். அவர் சொல்லி முடிக்க அவள் கட்டியணைக்க.

வினாடிகள் நிமிடங்களை பிடிக்கின்றன.

“எப்படி இருக்கு யோகசித்ரா?”

“ரொம்ப இன்பமா இருக்கு ஆனா தப்புபண்ற மாதிரி கூட ஒரு உணர்வு இருக்கு பிரபு…”

“தப்பா…இதுவா? தவசிகளுக்கு இது பிரதானம். உடம்பைபொறுத்தவரை அதை அடக்க ஒரே வழி இது தான். நீ உன்னையே உன் குருவுக்கு அர்ப்பணம் பண்ணியிருக்கே என் மகிழ்ச்சியால நீ மோட்சமடைவாய்”

“சந்தோஷம் பிரபு”

“அடிக்கடி வா யோகசித்ரா. ஆஸ்திரேலியா போனாலும் நான் அங்கு வரும்போது உனக்கு இந்த இன்பத்தை தருவேன். குருவோட ஐக்கியமாகிட்ட நீ மகா புனிதமானவ. இதை நீ உயிர்போனாலும் வெளிய சொல்லக்கூடாது. சொன்னா பெரிய பாவம் வந்து சேரும்…”

அக்ஷரா ஆமோதிப்பதாய் தலையசைக்கிறாள்.

“உனக்கு வேறு என்ன வேணும் கேள்.”

“உங்க ஆசிர்வாதம் போதும்”

“அற்புதம். உனக்கொரு வித்தை சொல்லித் தரட்டுமா?”

“உத்தரவு பிரபு”

“மாயமா விபூதி வரவழைக்கிற வித்தைய சொல்லித் தரேன். இந்த விபூதி நமது ஆஸ்ரம விபூதி. வேற எந்த விபூதியையும் நீ யாருக்கும் தரவோ தொடவோ கூடாது.

தவத்தில் நான் தினமும் வான்வெளியில் இருந்து வரவழைக்கற இந்த விபூதி ஒரு மகாப் பிரசாதம். இதை நான் ஆஸ்திரேலியாவுக்கு அனுப்பி தருவேன். இதை நீ உன் கைவசம் மட்டும் வெச்சுக்கணும். ஆஸ்ரம பூஜையில் இருக்கற விபூதி வேறஇது வேற…

“ஏன் பிரபு அப்படி?...

“அது சராசரி மனுஷர்கள் பயன்படுத்த, நம்மை போன்ற தேவதூதர்கள் பயன்படுத்தற விபூதி நித்ய இன்பம் தரக்கூடியது. அந்த விபூதியை நீ யாருக்குத் தந்தாலும் அவர்கள் அடுத்தடுத்து அந்த பிரசாதம் பெற உன்னை தேடி வருவாங்க. உன் கட்டளைக்கும் கீழ் படிவாங்க.

அவர்கள் தங்கள் சொத்துக்களையே நமது அமைப்புக்கு கேட்டாலும் தந்துடுவாங்க”

“ரொம்ப சந்தோஷம் பிரபு”

“போகப்போக பார்இன்னும் என்ன என்ன சொல்லித் தரேன்னு”

“அப்ப பிரபு…. நான் கிளம்பட்டுமா?”

“போய்வா…விரைவில் உன்னை மகா சீட பெண்மணியா அறிவிக்கிறேன்…”

அக்ஷரா எழுந்து நிர்வாணமாகவே நடக்கிறாள்.

“ஆடைகளை அணிந்து கொண்டு போ யோக சித்ரா”

கலியானந்தர் சொல்லிவிட்டு தனது நிர்வாண உடலை பார்த்து ஒரு சிரிப்பு சிரித்துக் கொள்கிறார்.

நீலா தயாராகிறாள் சாமயோகப் பயிற்சிக்கு அருகிலேயே யோகசித்ராவான அக்ஷரா அது பற்றி புல்லரிக்க தரும் விளக்கத்தோடு….

“அனுபவிச்சுப் பார் நீலா…அசந்து போவே இந்த இடத்தைவிட்டு வெளியே போகவே மனசு வராது. சதா அந்த பயிற்சி பற்றியே புத்தி போகும்.

கொஞ்சம் நாளைக்கு அப்படிதான் இருக்குமாம். அப்புறம் உடம்பு அடங்கிடுமாம். அடங்கினாதான் மற்ற விஷயங்கள் சாத்யம்னு சிம்மானந்தர் கூட சொன்னார்”

அக்ஷரா சொல்லச் சொல்ல நீலாவுக்கு சற்று வயிற்றைப் புரட்டுகிறது. அக்ஷரா புரிந்து பேசுகிறாளா என்றே தெரியவில்லை.

கிட்டதட்ட ஆசிரமம் முழுக்க தென்படும் பெண்களிடம் எல்லாம் கூட சாமி யோகப் பயிற்சி பற்றிதான் பேச்சே…

நீலா அதே சிந்தனையோடு நடக்கிறாள் நடக்கும் முன் ஒரு கேள்வி கேட்கிறாள் அக்ஷராவிடம்.

“அந்த பயிற்சி எப்படி இருந்தது அக்ஷரா?”

சொன்னா புரியாது…போய் பார் தெரியும்

“பார்க்கதானே போறேன். போன உடனே என்ன பண்ணனும் பிரபுவை பார்த்து கால்ல விழணுமா?”

“பார்த்தா…உன்னால அவர் பார்வையை பார்க்கவே முடியாது. அவர் நம்மை பார்க்கும்போதே நமக்கு பரவசமாயிடும். மத்ததெல்லாம் அவர் சொல்ற மாதிரி நடக்கும்”

“அப்படியா?” கேள்வியோடு நடக்க ஆரம்பிக்கிறாள் கலியானந்தரின் அறை வரவேற்கிறது.

கதவை திறக்க சொர்க்கலோக அமைப்பு வாவா என்கிறது. உள்ளே நுழையும்போது ஏனோ தலையை குனிந்து கொள்கிறாள். கலியானந்தா வழக்கம் போல நிர்வாண கோலத்தில்…

“வா நீலா வா..என்னை நிமிர்ந்து பார்.”

“இருக்கட்டும் பிரபு… உங்களை பார்க்க பயமா இருக்கு”

“பயமா நான் என்ன சிங்கமா புலியா. நான் அன்பின் வடிவம்மா”

கலியானந்தர் நிர்வாண கோலத்தோடு எழுந்து வந்து நீலாவின் தாடையை பற்றி நிமிர்த்த முனைகிறார்.

அதற்குள்ளாகவே அவரது தொடையில் ஒரு பெரிய தழும்பை பார்த்து விடுகிறது நீலாவின் கண்கள்…

“பிரபு இது என்ன தழும்பு?” அந்த கேள்வி சடாரென்னு கலியானந்தரை கலைக்கிறது.

“இந்த யோகத்தின்போது கேள்வி கேக்கக்கூடாது நீலா” இந்தா பிரசாதம் முதல்ல இதை சாப்பிடு…”

கையை சிமிட்டி விபூதியை கொட்டுகிறார். பிடித்துக் கொண்டு சாப்பிடும் பாவனை செய்தாலும் சாதுர்யமாக விபூதியை மஞ்சளாடையின் ரகசிய பாக்கெட்டில் போட்டுக் கொள்கிறாள்.

“ஆடைகளை களைத்துவிட்டு வா நீலா. பயிற்சியை சொல்லித்தரேன்.”

அடுத்த நொடி நீலா அவரை நிமிர்ந்து பார்த்து அவரது பார்வை தாளாதவள் போல மயங்க ஆரம்பிக்கிறாள்.

கலியானந்தருக்கே அவளது மயக்கம் புதிதாக இருக்கிறது.

விபூதியை ரசாயனப் பரிசோதனை செய்ததில் அதில் ஹெராயின்பிரவுன் ஷுகருக்கு இணையான போதை வஸ்து இருப்பதும்குறிப்பாக அது தென்அமெரிக்காவில் மிக பிரபலமான கொடுமையான ஒரு போதைப் பொருள் என்பதும் தெரிய வந்தபோது கோபால்ராவ் திடுக்கிட்டு போகிறார்.

மகளை அந்த பயம் கலையாமல் பார்க்கிறார்.

நீலாவிடம் துளிகூட அந்த மாதிரி உணர்வில்லை. ஒரே சிரிப்புதான்.

எதிரில் முதல்வரால் ரகசியமாக இந்த கேஸ்ஸை டீல் செய்ய அனுப்பப்பட்ட ஸ்பெஷல் போலீஸ் ரங்காச்சாரி!

“வெல்டன் நீலா…பிளான்படி போதை விபூதியை சாதுர்யமா கொண்டுவந்து போதை மருந்து கடத்தல் நடப்பதை நிரூபிச்சிட்டே” ஆனா அந்த தொடை தழும்புதான் எதுக்குன்னு தெரியலை.

அந்த கலியானந்தர் ஒரு ரோக். ஏதோ பிளானோடதான் ஆஸ்ரமம் போட்டுருக்கான்.

இப்பவே இருபதாயிரம் பேருக்கு பக்கமா விபூதியால மயங்கிட்டதா புள்ளி கிடைச்சிருக்கு. ரத்தத்துல பத்து நொடியில கலந்துருது…ஐந்து நிமிஷத்துல யூரினுக்கு பாஸாயிடுது.

அவனை அரெஸ்ட் பண்ணி விசாரிச்சா மத்த விபரமும் தெரிஞ்சுடும்.

தெரிஞ்சுடும் என…செல்லுலார் போன் தெரிவிக்கிறது செல்லமாக சிணுங்கி…

“ஹலோ ரங்காச்சாரி, உங்க ரிப்போர்ட் பேரில கலியானந்தரை அரெஸ்ட் பண்ணி தொடை தழும்பையும் பார்த்தோம். அது ஒரு சர்ஜரிக்காக செய்யப்பட்ட ஆபரேஷன் தழும்பு.”

ஆக்ச்சுவலி கலியானந்தர் ஒரு கடத்தல்காரன் அவன் பேர்ல இன்டர்நேஷனல் லெவல்ல ஐம்பத்தாறு கேஸ் இருக்கு.

பிளாஸ்டிக் சர்ஜரி செய்துகிட்டு முகத்தையே மாத்திகிட்டிருக்கான். கொஞ்சம் மனோவசியம் தெரியும்.

அவனின் ஒரே நோக்கம் கேஸ்ல தப்பிக்கறது மட்டுமல்ல. தனது போதை மருந்துக்கு தமிழ் நாட்டுல ஒரு கூட்டத்தையே அடிமைப்படுத்தறதும் கூட.

நல்லவேளை ஆயிரம்பேர் மயங்கிட்டாலும் நீலாங்கற பெண்ணோட துணிச்சல் இந்த நாட்டையே காப்பாத்தற ஒரு பெரிய சேவையா உருமாறியிருக்கு.

ரங்காச்சாரி செல்போனை அணைக்கிறார்.

நீலாவை பெருமிதத்தோடு பார்க்கிறார்.